# வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களின் தினசரி சந்தை நிலவரம் ஏற்படுத்திய மாற்றம் மற்றும் எனது அனுபவங்கள்:




**கே.பாண்டி,**
**த/பெ எம்.கருப்பணத்தேவர்,**
**வி.கீழபெருமாள்பட்டி,**
**கக்கரபனைக்கனூர் (PO),**
**முள்ளிபாளையம் (வழி),**
**உசிலம்பட்டி (TK), மதுரை (Dt).**
**அலைபேசி: 9786411767.**


மதுரை மாவட்டம் வி.கீழபெருமாள்பட்டி பகுதியில் வசித்து வரும் கே.பாண்டி ஆகிய நான் பல வருடங்களாக எனது நிலத்தில் கத்தரிக்காய், வெண்டை, சுரைக்காய், கொத்தவரை மற்றும் தக்காளி ஆகிய பயிர்களை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தினசரி சந்தை நிலவரம் (www.indg.in) ஏற்படுத்திய மாற்றம் மற்றும் எனது அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

"சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

உலகிலேயே தலையாய தொழில் விவசாய தொழில் தான் என்கிறார் வள்ளுவர். ஆனால் அத்தகைய விவசாய தொழிலில் நாங்கள் உழைக்கும் உழைப்பிற்கேற்ற ஊதியம் என்பது குறைவே.. நாங்கள் பயிரிட்டு உற்பத்தி செய்யும் காய்கனிகளை அருகிலுள்ள விவசாய சந்தைக்கு கொண்டு சென்றால் அங்குள்ள விற்பனையாளர்கள் மற்றும் இடைத்தரகர்களின் இடறப்பாட்டினால் நாங்கள் எங்களது விளைபொருட்களை தகுந்த விலைக்கு விற்பனை செய்யமுடிவதில்லை. ஏனெனில் எங்களுக்கு சரியான தினசரி சந்தை நிலவரம் பற்றிய விவரம் தெரியாததே காரணமாகும். சரியான சந்தை நிலவரத்தினை அறிய முடியாமல் இருந்த நிலையில் தான் எங்களுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்க

பயிற்சி நிலையம் (SAMETI) மற்றும் ஹைதராபாத்திலுள்ள உன்னத கணிப்பியல் வளர்ச்சி மையம் (C-DAC) இணைந்து இணையதளம் (www.indg.in) மூலமாக தெரிவிக்கும் வேளாண் விளை பொருட்களின் தினசரி சந்தை நிலவரம் எங்களது விவசாய வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாகவும் அவர்கள் உரிய நேரத்தில் கைபேசியில் சிறு தகவல் (SMS) வழியாக தரும் தினசரி சந்தை நிலவர பட்டியல் எங்களது விவசாய விளைபொருட்களின் விற்பனைக்கு மிகப்பெரிய உதவியாக அமைந்தது.

நான் கடந்த 15 ஆண்டுகளாக விவசாய தொழில் செய்து வருகிறேன். சமீபகாலமாக சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து மதுரைக்கு கொண்டு வரப்படும் காய்கனிகளின் அளவு குறைந்துள்ளது. நான் பயிரிட்ட ஆரம்ப காலத்தில் விவசாய சந்தை நிலவரத்தினை வானொலி பெட்டியிலும், தொலைக்காட்கியிலும் பார்த்தும், கேட்டும் தெரிந்து கொண்டேன். ஆனால், அது கடந்தகால விற்பனையை குறிப்பதால் அன்றாட சந்தை நடைமுறையை விற்பனையில் சிக்கல் ஏற்படுகிறது. உரிய நேரத்தில் விளை பொருட்களை சந்தையில் விற்பனை செய்ய முடியாமல் போவதால் விளைபொருட்கள் அழுகி போகும் அபாயமும் உள்ளது. இதனால் சில நேரங்களில் முதலீடு செய்த தொகையை விட நஷ்டங்களையும் சந்தித்துள்ளேன். ஆதலால் நுகர்வோர் தேவையறிந்து காய்கனிகளை பயிரிட ஆரம்பித்த நிலையில் தான் மதுரையை மையமாகக் கொண்டு சந்தையில் விற்பனை செய்து வந்த என்னை - தென்தமிழகத்தின் மிக முக்கியமான விவசாய சந்தைகளான ஒட்டன்சத்திரம், திருநெல்வேலி அதனை சுற்றியுள்ள உள்ளூர் சந்தைகளான அருப்புக்கோட்டை, சங்கரன் கோவில், ராஜபாளையம் ஆகிய ஊர்களின் சந்தைகளில் விற்பனையை துவக்கிய நேரத்தில் தான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்ககம் (SAMETI) மூலமாக தமிழகத்தின் பிற மாவட்டங்களில் உள்ள சந்தைகளை அறிமுகம் செய்வதோடு இல்லாமல் அந்தந்த சந்தைகளின் தினசரி சந்தை நிலவரத்தினை கைபேசியில் சிறு தகவல் (SMS) மூலமாக தெரிந்து கொள்வதால் நாங்கள் உற்பத்தி செய்த விளை பொருட்களின் விலை நிலவரத்தை நாங்களே நிர்ணயித்து எந்த ஒரு இடைத்தரகர்களின் இடையூறு இல்லாமல் நாங்களே நேரடியாக சந்தையில் விற்பனை செய்ய முடிகிறது. மதுரை சந்தைக்கு தினமும் 2 முதல் 5 ஆயிரம் கிலோ வரை கொண்டு வரப்படும் காய்கனிகளில் நாங்கள் சில ஆயிரம் காய்கனிகளை

தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும், வெளிமாநிலத்திற்கும் காய்கனிகளை அனுப்புகின்றோம். சில நேரங்களில் நஷ்டத்தை சந்தித்து வந்த நாங்கள் இனிமேல் ஆண்டு தோறும் ஆயிரங்களிலிருந்து ரூபாய் 1 முதல் 3 இலட்சம் வரை இலாபம் சந்திப்போம் என்றால் அது தினசரி சந்தை நிலவரம் (www.indg.in) திட்டத்தின் வழிகாட்டுதலும், மேலும் தன்னலமற்ற தமிழ்நாடு வேளாண் விஞ்ஞானிகளின் ஈடு இணையில்லா அயராத உழைப்புமே ஆகும் என்பதை மனநிறைவோடு கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எதிர்காலத்தில் நுகர்வோரின் தேவையறிந்து காய்கனிகள் பயிர் செய்வதுடன், விவசாயிகளுக்கு தேவையான உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, தமிழகம் மட்டுமில்லாமல் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உள்ள விவசாய சந்தைகளின் தினசரி சந்தை நிலவரத்தினை அறிமுகப்படுத்தினால் நானும் என்னை போன்ற பல விவசாய மக்களும் இன்னும் முனைப்போடு விவசாயம் செய்வதோடு அல்லாமல், எங்கள் வாழ்வில் மேலும் பல முன்னேற்றங்கள் அடைவோம் என்று கூறி வேளாண் விஞ்ஞானிகளுக்கு மீண்டும் ஒரு முறை என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

தங்கள் உண்மையுள்ள

கே.பாண்டி,

9786411767